29.11.2022

OS 26/2019

பி.வா.சா.1 மீனாள்

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

நான் பட்டுர் ஆலம்பட்டியில் இருந்து வருகிறேன். நான் 6வது வரை படித்துள்ளேன். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். தாவா வழக்கை எனது கணவர்தான் தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கில் சொத்து கேட்டு வழக்கு போட்டுள்ளார். தாவா வழக்கில் மொத்தம் 7 அயிட்ட சொத்துக்கள் உள்ளன. சர்வே எண் மறந்துவிட்டது. 1வது வாதி பெரியதம்பி எனது மாமனார். 2,3 பிரதிவாதிகள் எனது சின்னமாமனார். 6வது பிரதிவாதி மீனாட்சி எனது தாயார். அவர் பெரியதம்பியுடன் உடன் பிறந்த சகோதரி. 7வது பிரதிவாதியும் என் மாமனாருடன் பிறந்த சகோதரி. எனது மாமனாரின் தகப்பனார்தான் 1வது பிரதிவாதி முத்துகருப்பன். முத்துக்கருப்பனின் தகப்பனார் பெயர் தெரியாது. முத்துக்கருப்பனின் மனைவி பெயர் வள்ளியாயி. 4வது வாதிக்கும் எனக்கும் 1996ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். நான் 1980ம் வருடம் பிறந்தேன் என்றால் சரிதான். எனது தாய் வழி தாத்தா முத்துகருப்பனின் தகப்பனார் பெயர் வெள்ளையன்நாடார் என்றால் சரிதான். வெள்ளையன்நாடாருக்கு பூர்வீகம் எனது ஊர் பட்டுர் ஆலம்பட்டி. வெள்ளையன்நாடாருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் இருந்தது பற்றி எனக்குத் தெரியாது. வெள்ளையன்நாடார் எப்போது இறந்தார் என்று எனக்குத் தெரியாது. வெள்ளையன்நாடார் இறப்பிற்கு பின் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவருடைய வாரிசுகள் 6பேர் பிரித்து கொண்டார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் இன்னும் பிரிக்கவில்லை. வெள்ளையன்நாடார் சொத்துக்கள் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, அதில் 18 செண்ட் மட்டும் உள்ளது. வெள்ளையன்நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் 1/6 பங்கான 1ஏக்கர் 6செண்ட் எனது தாத்தாவான முத்துகருப்பனுக்கு பாத்தியமாகி பிரித்துக் கொடுக்கப்பட்ட விவரம் எனக்குத் தெரியுமா என்றால் இன்னும் பிரித்துக் கொடுக்கப்படவில்லை. மேற்படி சொத்திற்கு ஆவணங்கள் உள்ளது. சொத்திற்கு ஆவணங்கள் என்னிடம் இல்லை. தாவா சொத்துக்களில் சில சொத்துக்களை உள்ளடக்கி முத்துக்கருப்பன் ஒரு உயில் மூலம் 2000ம் வருடம் எழுதிவைத்தார் என்றால் சரிதான். அந்த உயிலை பற்றிய சங்கதிகளை இந்த வழக்கில்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய எதிர்வழக்குரையில் உயிலை பற்றி சொல்லவில்லை என்று கேள்வி கேட்டு எதிருரையை காண்பித்து கேட்டபோது உயிலை பற்றி அதில் சொல்லப்படவில்லை என்று சாட்சி சொல்கிறார். என்னுடைய நிருபணவாக்குமூலத்துடன் சேர்த்து 6 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணங்கள் எந்த வருடம், என்னென்ன ஆவணங்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. என்னுடைய தாத்தா முத்துகருப்பன் 2015ம் வருடம் இறந்து போனார். இந்த வழக்கு 2012ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் முத்துகருப்பன் எந்த எதிர் வழக்குரையும் பிரத்யேகமாக தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் 1 முதல் 7 பிரதிவாதிகளில் நானும், எனது மகளும் மட்டும்தான் எதிருரை தாக்கல் செய்துள்ளோம், மற்ற பிரதிவாதிகள் பிரத்யேமாக எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். எதிர்வழக்குரை பாரா 5ல் 1வது பிரதிவாதி, வாதி, மற்றும் 2மற்றும் 3 பிரதிவாதிகளும் கூட்டுகுடும்பமாக இருந்தபோது, வாதி, 2,3 பிரதிவாதிகள் பெயரில் 1ம் பிரதிவாதி சொத்துக்கள் வாங்கி அவற்றை அவர்களுக்கு கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன்படி அவர்கள் கூட்டுகுடும்பமாகத்தான் இருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன். 1ம் பிரதிவாதி எந்த வருமானத்தின் அடிப்படையில் சொத்துக்கள் வாங்கினார் என்றால் மாங்காய் வியாபாரம் செய்தும், வண்டிமாடுகள் ஓட்டியும், சுயமாக சம்பாதித்தும் மேற்படி சொத்துக்களை வாங்கினார். மேற்படி விவரங்களை என்னுடைய எதிருரையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்தை வைத்துதான் 1ம் பிரதிவாதி வாதிக்கும், 2,3 பிரதிவாதிகளுக்கும் சொத்துக்களை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. தோப்பை குத்தகைக்கு எடுத்தும் சுயமாக சம்பாதித்தார். எனது தாத்தா இறக்கும் போது அவருக்கு வயது 95. மாங்காய் வியாபாரம் செய்வது, தோப்பை குத்தகைக்கு எடுப்பது எனது தாத்தாவின் குடும்ப தொழில் என்றால் சரிதான். வாதி மற்றும் 2,3 பிரதிவாதிகள் ஒத்தாசையாக இருந்து, சொத்தை அவர்கள் பெயரில் 1ம் பிரதிவாதி வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் வாதி மற்றும் 2,3 பிரதிவாதிகள் சிறிய பிள்ளைகள் என்று சாட்சி சொல்கிறார். அப்போது அவர்களுக்கு சுமார் 10, 12 வயதிருக்கும். நான் 1980ல் பிறந்ததால் அதற்கு பின் 1980, 1984, 1986 வருடங்களில் ஏற்பட்ட ஆவணங்கள் பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. இந்த விவரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் 1-1/2 செண்டில் ஒரேயொரு ஓட்டுவீடு இருக்கிறது, தற்போது

இடிந்துவிட்டதாக சொல்கிறார். அந்த ஓட்டுவீடு எப்போது கிரையம் பெறப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. 1-1/2 செண்டில் உள்ள ஓட்டுவீடு பூர்வீக வீடு இல்லை. பூர்வீக வீடு ஆலம்பட்டியில் தள்ளி உள்ளது. அந்த பூர்வீக வீட்டில் ஆதியில் எனது தாத்தா இருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் எனது பாட்டி வள்ளியாயி கிரையம் பெற்ற சொத்தும் உண்டு என்றால் சரிதான். அது எத்தனையாவது இலக்க சொத்தாக இவ்வழக்கில் காட்டப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் எத்தனையாவது இலக்கம் என்று தெரியாது. அது 45 செண்டாகும். அதில் பூமிராஜ், ஆசைதம்பி மற்றும் எனக்கும் பாகம் உள்ளது. எனது மாமனார் பாகம் எனக்கு வந்துவிட்டது. அந்த சொத்தில் எனது தாத்தா இருக்கும்வரை எந்த பாகப்பிரிவினையும் நடக்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்து எப்போது கிரையம் வாங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வள்ளியாயிக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் சேர்த்துதான் 2017ம் வருடம் பாகப்பிரிவினை செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்படி தரப்பினராக 2,3,4,5 பிரதிவாதிகளுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்லியுள்ளது என்றால் சரிதான். அதில் நான் ஒரு இந்து அபிபக்த குடும்பம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் என் மாமனாரின் வாரிசுகள் யாரும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் 11 முதல் 16 வரையிலான ஆவணங்கள் வழக்கிடையில் ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். எனது மாமனார் பெயரிலேயோ அல்லது 2,3 பிரதிவாதிகள் பெயரிலேயோ ஏற்பட்ட கிரைய ஆவணங்களை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த சொத்துக்கள் அவர்களிடையே பாகவிஸ்தி செய்யப்பட்டுள்ள விவரத்தை என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். ஏன் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்ற விவரத்தை தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பத்திரத்தில் 1980, 1984, 1986 வருடத்திய கிரைய பத்திரங்கள் சொத்துக்கள் பற்றி 2003ம் வருடத்தில் பாக விஸ்தி ஆனதுபற்றி நான் சொல்லியுள்ளேன். அதில் அந்த சொத்துக்கள் வாங்கப்பட்ட விவரமும், குடும்பத்தை பற்றிய விவரமும் அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அந்த பத்திரத்தை பார்த்தால் 2003ல் ஏற்பட்ட பாகவிஸ்தி பத்திரம் என்பதை சொல்லிவிடுவேன் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.